இதழ்-71

01.05.2024

# துமி

பல்சுவை மின்னிதழ்




## பெருவெள்ளத்திற்கான பயணம்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

ஆசிரியர்
ச. சந்தோஷன்

இணை ஆசிரியர்கள்
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

திறனாய்வாளர்கள்
கு. கீர்த்தனன்

வடிவமைப்பாளர்
வ. குணநீதன்
ச. மதுஷா

செய்தியியலாளர்
ந. மயூரன்

# இவ்விதழில் துமித்தவை...

03 திருகோண வளச் சங்கமத்தில் உருவாகியுள்ள கருவளர்ச்சி சிகிச்சை நிலையம்
07 இந்த கைகளை எப்போதும் ஞாபகம் வைத்திருங்கள்
08 உழைக்கும் கால்களே தவம் செய்யும் தாள்கள்
15 அருகி வரும் செண்பகத்தை காப்போம்
16 வல்வெட்டுத்துறையும் இந்திர விழாவும்
19 ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் இனமுரண்பாடு
22 கனத்துப்போன இதயங்கள்
26 என் கால்கள் வழியே...
30 சிறப்பாக நடந்த மகளீர் இல்ல ஆண்டுவிழா
32 பட்டினத்தாரின் தாய்ப்பதிகம்
34 தமிழ்ப் பேறிஞருக்கு இதய அஞ்சலி
36 ஐபிஎல் ரன் மழையின் இரகசியம் என்ன?



வாசகர்கள் அனைவருக்கும்
இனிய உழைப்பாளர்
திருநாள்
நல்வாழ்த்துக்கள்

# திரிகோண வளச் சங்கமத்தில் உருவாகியுள்ள கருவளர்ச்சி சிகிச்சை நிலையம்

ஆசிரியர் பதிவு

ஒரு செயற்திட்டம் வெற்றிகரமாக நிறைவேற வேண்டுமானால் அதன் சாதக பாதக தன்மைகளை ஆராய்ந்து, அதற்கேற்ப திட்டமிட போதுமான அறிவுசார் வளம் முதலாவதாக இருக்க வேண்டும். அடுத்து, அந்த அறிவினால் உருவாக்கப்பட்ட திட்டத்தை நடைமுறைப்படுத்த போதுமான நிதி வளம் வேண்டும். இவற்றையெல்லாம் மட்டும் பெற்றுவிட்டால் போதுமா? என்றால் போதாது. இவற்றை செயற்படுத்தவும் களத்தில் வேலை செய்யவும் போதுமான ஆளணி வேண்டும். அதாவது மனித வளம் வேண்டும். அறிவுசார் வளம்(புலமை வளம்), நிதி வளம், மனித வளம் என்கின்ற இந்த மூன்று வளங்களும் கிடைக்கின்ற போதுதான் அந்த செயற்திட்டம் வெற்றியடையும்.

சமீப காலத்தில் எமது மண்ணில் நடந்த செயற்திட்டங்கள் பல அவற்றின் இலக்கை எய்துகொள்ள முடியாமைக்கான மூல காரணம் இந்த மூன்று வளங்களில் குறைந்தபட்சம் ஏதாவது ஒரு வளத்தினது பற்றாக்குறையாகவே இருக்கும். எனவே, இந்த மூன்று வளங்களையும் ஒரு புள்ளியில் சந்திக்க வைப்பது என்பது ஒரு மிகப்பெரிய சவாலாகவே இருந்திருக்கிறது. அரச சார் செயற்திட்டங்களில் மனித வளத்திற்கோ, புலமை வளத்திற்கோ தட்டுப்பாடு இல்லாத போதும் அரச திறைசேரியில் வழங்கப்படும் மட்டுப்படுத்தப்பட்ட நிதி வளம் காரணமாக வினைத்திறனான செயற்திட்டத்தை உருவாக்க முடியாமல் போகலாம். அவ்வாறு உருவாக்கினாலும் அதனை தொடர்ச்சியாக முன்னெடுப்பதில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டிவரும். அரசியல் தலையீடுகள், திணைக்கள தலைமைகள் மாற்றம், செயற்திட்டத்தின் செயற்பாடுகளை கண்காணிக்கும் மூன்றாம் தரப்பு இல்லாமை போன்றவற்றை அவ்வாறான சில காரணங்களாக சொல்லலாம்.

அந்த வகையில் அண்மையில் யாழ்நகரில் ஆரம்பிக்கப்பட்ட சிவபூமி கருவளர்ச்சி சிகிச்சை நிலையம் எமது மண்ணிற்கு கிடைத்த மிக முக்கியமான மருத்துவ வரம் என்பதற்கு அப்பால் இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள விதம் யாம் மேற்கூறிய மூன்று வளங்களையும் ஓர் புள்ளியில் சந்திக்க வைத்த ஒரு முயற்சியாகவே பார்க்க வேண்டும். ஆளணி வளம் குன்றாமல் வந்து கொண்டிருக்கும் யாழ் போதனா வைத்தியசாலையும், புலமைசார் வளம் நிறைந்திருக்கும் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடமும் இந்த செயற்திட்டத்திற்குள்

காணப்படும் அரசசார் நிறுவனங்கள். எனவே மனித வளமும், புலமை வளமும் இவர்களுக்கு என்றும் கிடைத்துக் கொண்டே இருக்கும். எனவே நிதி வளம் என்பதும் தொடர்ச்சியாக கிடைக்குமானால் இந்த செயற்திட்டம் வெற்றிகரமாக ஆண்டுகள் கடந்து பயணிக்க இயலும். ஆனால் பல லட்சங்கள் செலவாகும் இந்த கருவளர்ச்சி பிரிவுக்கு போதுமான நிதியினை தொடர்ச்சியாக வழங்க அரச கருவூலத்தால் இயலாது. இயன்றாலும் அது வடபுலத்திற்கு வருமா என்பதும் ஐயமே!

ஏற்கனவே கட்டடமின்றி தவிக்கும் யாழ் போதனா வைத்தியசாலைக்கு நிதி வளம் என்பது பாரிய பிரச்சனை. இந்த நிலையில் தான் சிவபூமி, அபயம் போன்ற தொண்டு நிறுவனங்களின் தேவைப்பாடு இந்த செயற்திட்டத்திற்குள் முக்கியத்துவம் பெறுகிறது. எமது உறவுகளுக்கு உதவுவதற்கு பல செல்வம் படைத்தவர்களும் தயாராக இருந்தாலும், அவர்களுக்கு இருக்கும் முக்கிய பிரச்சினை யாரூடாக இந்த உதவிகளை செய்வது என்பதுதான். தொண்டு நிறுவனங்கள் என்கிற பெயரில் தங்களை வளர்த்துக்கொள்ளும் மோசடிக் காரர்கள் நிறைந்த உலகத்தில் தேடித்தேடி மக்களுக்கு உதவிகளை செய்து அறப்பணிகளை ஆற்றி வரும் அபயம், சிவபூமி அமைப்புக்கள் மக்களின் நூறு வீத நம்பிக்கையைப் பெற்றவை. இங்கே கொடுத்த பணம் சேர வேண்டிய இடத்தில் சேரும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கை. இதனால்த்தான் மாதந்தோறும் பல லட்சங்கள் பெறுமதியான அறப்பணிகளை இவர்களால் செய்ய முடிகிறது. அதற்கான பணமும் தொடர்ச்சியாக கிடைத்துக் கொண்டிருக்கிறது. யாழ் நகரின் மையத்தில் பல கோடிகளுக்கு விற்பனையாகக்கூடிய பெரிய வீட்டினை செனட்டர் கனகநாயகம் குடும்பத்தினர் இலவசமாக சிவபூமிக்கு வழங்கியமை இந்த நம்பிக்கையினால்த்தான் என்றால் அது மிகையில்லை.

அதோடு இந்த கருவளர்ச்சி சிகிச்சை நிலைய செயற்பாடுகளை கண்காணிக்கும் மூன்றாம் நபராகவும் சிவபூமி இருக்கப்போவதாலும், வைத்தியசாலை செயற்பாடுகள் திருப்தியளிக்காவிட்டால் கட்டடம் திரும்பப்பெறப்படும் என்கிற நிபந்தனை ஒப்பந்தத்தில் இருப்பதாலும் தலைமைகள் மாறினிலும் வினைத்திறனான சேவையை காலங்கள் கடந்தும் பெறக்கூடியவாறு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகிறது.

சிவபூமி மற்றும் அபயம் அமைப்புக்கள் (நிதி வளம்), யாழ் பல்கலைக்கழகம் (புலமை வளம்), யாழ் போதனா வைத்தியசாலை (மனித வளம்) ஆகிய மூன்று வளங்களும் ஒரு புள்ளியில் சந்திக்க முடிந்திருக்கிறது என்றால் அது எவ்வாறு சாத்தியமாகி இருக்கிறது? அதற்கான காரணம் கலாநிதி. ஆறு. திருமுருகன் ஐயா அவர்கள். ஈழத்தின் மிக முக்கியமான மனிதராகவும், உலகளவில் ஈழத்தின்

அடையாளமாகவும், எல்லோருடைய அபிமானத்தையும் அன்பையும் நம்பிக்கையையும் பெற்ற சமயப் பெரியவராகவும், எல்லாவற்றிற்கும் மேலாக பல வருடங்களாக தொடர்ச்சியான மக்கள் சேவையால் செயல்வீராக செயற்பட்டுவரும் கலாநிதி ஆறு. திருமுருகன் ஐயா அவர்களால் மட்டுமே இந்த மூன்று வளங்களும் ஒரு புள்ளியில் சந்தித்திருக்கின்றன.

எனவே, இந்த கருவளர்ச்சி சிகிச்சை நிலையத்தில் வளங்கள் எவ்வாறு ஒன்றிணைக்கப்பட்டுள்ளதோ அது போல இனிவரும் மக்கள் நலன்சார் செயற்திட்டங்கள் யாவற்றிலும் புலமை வளம், மனித வளம், நிதி வளம் ஆகிய வளங்களை ஒன்றாக்கி நிலைபேறானதும் வினைத் திறனானதுமான செயற்திட்டங்களை உருவாக்க வேண்டும்.

மண்ணிற்காகவும் மக்களுக்காகவும் உழைக்க வேண்டிய எத்தனையோ இளம் தலைமுறைகள் வீதிகளில் இலக்குகள் இன்றி சுற்றித்திரியும் இந்த நேரத்தில் இதுபோன்ற வினைத்திறனான செயற்திட்டங்கள் பலவற்றை எமது மண்ணில் தூர நோக்கோடு உருவாக்குவதன்மூலம், மண்ணின் மைந்தர்கள் யாவரையும் உழைக்கும் தொழிலாளர்கள் ஆக்க வேண்டும்! அந்த சிந்தனையோடு இந்த தொழிலாளர் தினத்தை கொண்டாடுவோம்!

**உழைப்போம்!**
**உழைக்க வைப்போம்!**
**உயர்வோம்!**

**அனைவருக்கும் தொழிலாளர் தின வாழ்த்துகள்!**

சிவபூமி அறக்கட்டளையின் அனுசரனையுடன் யாழ்போதனாவைத்தியசாலை மற்றும் யாழ்பல்கலைக்கழக மருத்துவபீடம் இணைந்து உருவாக்கிய பெண்கள் சுகநல நிலையத்தில் யாழ் மருத்துவபீடத்திற்குரிய கருவளசிகிச்சையகமானது (24.04.2024 ) ஆரம்பிக்கப்பட்டது. இவ்வளவுகாலமும் யாழ்போதனாவைத்தியசாலையிலே நடைபெற்றுக்கொண்டிருந்த கருவளசிகிச்சையகமானது இன்றுமுதல் இல 61,1 ஆம் குறுக்குதெரு, யாழ்ப்பாணம் எனும் இடத்தில் அமைந்துள்ள பெண்கள் சுக நல நிலையத்தில் நடைபெறும்.

யாழ்மருத்துவபீட கருவளசிகிச்சை கிளினிக்கானது ஒவ்வொரு புதன்கிழமையும் பிற்பகல் 2.00 தொடக்கம் 4.00 மணிவரை இங்கு நடைபெறும்.

# யாழில் சிவபூமியின் கருவளர்ச்சி நிலையம்




ஏழைப் பெண்களின் நல் வாழ்விற்காக சிவபூமி அறக்கட்ளை யாழ் மருத்துவத் துறையுடன் இணைந்து நடாத்தும் பெண்கள் சுகநல நிலையம்,21.04.2024 திறந்து வைக்கப்பட்ட்து.

சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வரின் தலைமையில் நடைபெற்ற இவ் நிகழ்வில் யாழ் மருத்துவத் துறையினை சார்ந்த ஏராளமான மருத்துவ நிபுணர்கள் கலந்து கொண்டார்கள். சங்கரத்தை அமரர் செனற்றர் ளு.சு கணகநாயகம் சக்தியம்பாள் நினைவாக வைத்திய கலாநிதி அப்புப்பிள்ளை பாலசுப்பிரமணியம் சாவித்திரிதேவி அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட இவ் ரூபா 800 இலட்சம் பெறுமதியான நிலையத்தினை, பாலசுப்பிரமணியம் சாவித்திரிதேவி அவர்களின் சகோதரரான இலங்கையின் புகழ்பெற்ற ஜனாதிபதி சட்டத்தரணி கனக் ஈஸ்வரன் அவர்களால் இன்று திறந்து வைக்கப்பட்டது.



எங்கள் மண்ணில் குழந்தைச் செல்வத்திற்காக ஏங்குகின்ற ஏழைப் பெண்களிற்கு செஞ்சொற்செல்வரின் இந்த முயற்சி பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை. இவ் சிகிச்சை நிலையத்திற்கு தேவையான மருத்துவ உபகரணங்களை புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் பெற்றுக் கொடுக்க செஞ்சொற்செல்வர் நடவடிக்கை எடுத்து வருகின்றார்.







# இந்த கரங்களை எப்போதும் ஞாபகம் வைத்திருங்கள்



ஒரு கிலோ தேயிலை உற்பத்தி செய்ய ஐயாயிரம் தேயிலை இலைகளை பறிக்க வேண்டும்.



சராசரியாக ஒரு வாரத்திற்கு ஏழு மில்லியன் கிலோகிராம் தேயிலையை இலங்கை ஏற்றுமதி செய்கிறது.



இத்தனை கிலோ தேயிலையும் பறிப்பவர்களின் கைகளில் இருந்தே தொடங்குகிறது. ஆனால், தேநீர் பற்றிப் பேசும்போது யாருக்கும் இவர்களின் வாழ்க்கை போராட்டங்கள் ஞாபகம் வராது.



# உழைக்கும் கால்களே....
# தவம் செய்யும் தாள்கள்

இளைஞர்களின் எதிர்காலம் எதை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது? இன்றைய நாட்களில் பொழுதுபோக்கு செய்தி ஊடகங்களின் பெருந்தீனியாக பல இளைஞர்களது வாழ்க்கைச் சம்பவங்களே பதிவாகிக்கொண்டிருக்கின்றன. ஏதோ ஒரு போதையின் வசப்பட்டு அவர்கள் ஆற்றுகிற செயல்களின் அர்த்தங்கள் பற்றியோ விளைவுகள் பற்றியோ இன்றைய இளைஞர்கள் சிந்திப்பதில்லை. சிந்திக்கவும் அவர்களால் இயலவில்லை. இளையோரால் நிகழ்ந்துவிடுகின்ற சமூக குற்றங்களை வெறுமனே செய்தியாக நோக்கி இளந்தலைமுறை மீதான நம்பிக்கையில்லா போக்கை வளர்ப்பதுவே இன்றைய பெரும்பாலான ஊடகங்களினது தலையாய கடமையாயுள்ளது. அறியாமையில் குற்றங்களை நிகழ்த்திவிடுகிற இளந்தலைமுறையின் எதிர்காலமே கேள்விக்குறியாகின்ற பல செயல்களை ஊடகங்கள் தொடர்ந்தும் செய்து வருவதை அண்மைக் காலங்களில் காண முடிகிறது.

***‘ஊடகங்களை குறைசொல்லக் கூடாதுதான். அதற்காக இளைஞர்களை குறை சொல்ல முடியுமா? அல்லது சமூகத்தை குறை சொல்ல முடியுமா?’*** ஒரு சமூகம் நாகரீகமானதாக வளர்வதற்கு மூல காரணமே அந்த சமூகத்தின் இளைஞர்கள் தான். அத்தகைய இளைஞர்கள் இப்படி சமூகத்தின் குற்றவாளிகளாய் மாறுவதற்கு என்ன காரணம்? எத்தனையோ காரணம் இருக்கலாம். ஆனால் ஏகமானதாக எல்லோரும் சொல்லக்கூடிய- எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்

கூடிய ஒரு காரணம் "ஒழுங்கான ஒரு வேலையில்லை!" முறையான தொழிலில் இளைஞர் தம் கவனத்தை செலுத்துவாரானால் தேவையற்ற எண்ணங்கள் தானாக விலகி விடும் என்பது மறுக்கமுடியாத உண்மைதான். இன்றைய இளைஞன் படிக்கிறான், பட்டதாரியாகிறான், அறிஞன் ஆகிறான். அறிவின் பயன் என்ன செய்யவேண்டும் என்று அறிந்து செய்கிறானா?

மனிதன் விலங்குகளின்றும் வேறுபட்ட நிலை, உணவைத் தேடும் நிலையில்தான் தொடங்கியது. பின்னாளில் அவன் வளர, வளர உணவைத் தேடாமல் படைக்கத் தொடங்கினான். இந்தக் காலக்கட்டத்தில் தான் உழைப்பு வளர்ந்து கருவிகளுடன் மனிதனுக்குத் தொடர்பு ஏற்பட்டது. உண்ணும் உணவைத் தனது கடின உழைப்பால்-நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத்துப் படைத்து உண்ண ஆரம்பித்தான்.

உழைப்பு என்பது அனைவருக்கும்-மனித குலம் முழுவதுக்கும் உரிய பொறுப்பு. மனித குலத்தில் யாராவது சிலர் உழைக்காமல் வாழ்ந்தால் அவர்களுடைய உழைப்பின் பங்கை



மற்றவர்கள் சுமக்க வேண்டிய நிலை ஏற்படும். இன்று இந்தப் போக்கு அதிகமாக வளர்ந்து வருகிறது. உழைக்காதவர்களும் அல்லது அரைகுறையாக உழைப்பவர்களும் அல்லது உழைப்பது போலப் பாவனை செய்பவர்களும் இன்று சமுதாயத்தில் பல்கிப் பெருகி வருகின்றனர். இது ஒரு சாபக்கேடு. இந்தத் தவறான நடைமுறை பெரும்பாலும் படித்தவர்களிடையிலும் அதிகார வர்க்கத்தினரிடையிலும் பரவி வருகிறது.

நமது நாட்டில் உணவுப் பொருள்கள் வற்றாமல் வருகின்றன. ஆனால் பணப் பற்றாக்குறை இருக்கிறது. கடன் வாங்க வேண்டியிருக்கிறது. இது ஏன்? உழவோர் உலகம் தமது உழைப்பை முறையாகச் செய்து நாட்டைப் பாதுகாத்து வருகிறது. மற்றத் துறைகளில் போதிய உழைப்புக் கிடைக்கவில்லை என்பது தானே உய்த்துணரக்கூடிய கருத்து.

நாம் ஒவ்வொருவரும் மற்றவர்களின் உழைப்பில் - எண்ணற்ற உயிர்த் தொகுதிகளின் உழைப்பில் வாழ்கிறோம். நாம் நமது ஒருநாள் வாழ்க்கைக்கு என்னென்ன தேவை என்று கணக்கிட்டால் நாம் இந்த உலகத்தில் மற்றவர்கள் அல்லது மற்றவை உழைப்பிலிருந்து நமது வாழ்க்கைக்கும் நுகர்வுக்கும் எவ்வளவு எடுத்துக்கொள்கிறோம் என்பது புரியும்.

அப்படியானால், உழைக்காது வாழ்பவர்கள் பிறர் பங்கைத் திருடுகிறார்கள் அல்லது பிறருக்கு

சுமையாக இருக்கிறார்கள். அண்ணல் காந்தியடிகள் ***'உழைக்காமல் உண்பவர்கள் திருடர்கள்'*** என்றார்.

சமூகத்தின் ஒவ்வொரு இளைஞரும் எந்தவிதமான தூண்டுதலுமின்றி இயல்பாகவே உழைக்கும் உணர்வு பெறவேண்டும். என்று மனிதகுலத்துக்கு உழைப்பு ஜீவ சுபாவமாக அமைகிறதோ, அன்றே **'சக்திக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற ஊதியம்'**" என்ற பொதுவுடைமைச் சமுதாயம் அமைய இயலும்.

உழைப்பின் சின்னமாகிய காய்த்துப்போன கைகளும் கால்களும் எல்லோரும் பெறவேண்டும். ஒருநாள் நபிகள் நாயகம், தம்மைக் காண வந்தவர்களுடன் கட்டித் தழுவியும், கைகளைப் பற்றிக் கண்ணில் ஒற்றியும் வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியையும் வழங்கிக் கொண்டிருந்தார். அப்படி வந்தவர்களுள் ஒருவரின் கையைப் பற்றிய அண்ணலார் நபிகள் நாயகம் நீண்ட நேரம் திரும்பத் திரும்ப அவர் கையைக் கண்களில் ஒற்றிக்கொண்ட தோடன்றி, கண்களில் நீர்மல்க நின்றுகொண்டிருந்தார். மற்றவர்கள் காரணம் கேட்டபோது, "இவருடைய கைகளில் உழைத்துக் காய்த்துப்போன சுவடுகள் இருந்தன. அவை எனக்குப் பெருமகிழ்வைத் தந்தன." என்று நபிகள் நாயகம் அருளிச் செய்ததாக அவர் வரலாறு கூறுகிறது.

மனிதன் இன்ப நுகர்ச்சியிலும் மகிழ்ச்சியிலும் மட்டுமே திளைத்து வாழ நினைக்கிறான். இன்ப நுகர்ச்சியையும் மகிழ்ச்சியையும் வாழ்க்கையின் இலட்சியங்களாகக் கொள்கிறான். உழைப்பே வாழ்க்கையின் உயர் குறிக்கோள் என்பதை மனிதகுலம் உணரவேண்டும். உழைப்பின் வழி, இன்ப நுகர்ச்சியும் மகிழ்ச்சியும் தானாய் கிடைக்கும்.

உழைப்பு, உடலுக்கு உறுதி சேர்க்கும். அறிவு வளர்ச்சிக்கும் உதவும். இந்த உலகில் பலவற்றிற்கு எல்லை உண்டு. ஆனால், அறிவுக்கும் ஆளுமை நிறைந்த உழைப்புக்கும் சக்திக்கும் எல்லையே கிடையாது. மூளை இயங்க, இயங்க அறிவு வளரும். உழைப்பு தொடர்ந்து இடையீடின்றி நிகழின் உழைக்கும் சக்தியும் வளரும். அறிவு பூர்வமாகவும், விருப்பத்துடனும், ஆர்வத்துடனும் உழைத்தால் களைப்பு வாராது. மாறாகக் களிப்புணர்வே தோன்றும்.

தனக்குக் கிடைக்கும் ஊதியத்தின் மதிப்பைவிடத் தன்னுடைய உழைப்பின் மதிப்பை உயர்த்திக் காட்டும் மனிதன்தான் சமூகத்திற்குப் பயன்படுவான். சமூகத்தில் ஒரு நிலையான இடத்தை முன்னேறிப் பெறுவான். இதுவே வாழும் நியதி. ஆழ்கடலின் மேலே புல் பூண்டுகள் மிதக்கும், செத்தைகள் மிதக்கும்.



ஆனால், முத்து ஆழத்தில்தான் கிடக்கும். முத்தை விரும்புவோர் ஆழ்கடலில் மூச்சடக்கி மூழ்கித்தான் முத்தை எடுக்கவேண்டும். அதுபோல, வாழ்க்கையில் அரும்பயனையும் வெற்றியையும் விரும்புவோர் உழைத்தல் வேண்டும்.

உடம்பு, உழைப்பினாலாயது. உழைப்பதற்கே உரியது. இரும்பு, பயன்படுத்தப் பயன்படுத்த உறுதிப்படும். நீண்ட நாட்களுக்கும் பயன்படும். உழைப்பில் பயன்படுத்தப்படாத இரும்பு துருப்பிடித்து அழியும் விலை மதிப்பையும் இழக்கும். இரும்பு துருப்பிடித்து அழிவதைவிட, உழைப்பில் பயன்படுவதன் மூலம் தேய்வதே மேல்.

**'வேலை செய்வது கடினம், ஆனால், எந்த வேலையும் கடினமன்று'** என்பது ஒரு சைப்ரஸ் பழமொழி. **வேலை செய்வது கடினமல்ல. வேலை செய்ய விருப்பம் இல்லாததால் வேலை கடினமாகத் தோன்றுகிறது.** ஆனால், ஆர்வத்துடன் அறிவறிந்த ஆள்வினையின் மூலம் எந்த வேலையையும் எளிதாகச் செய்து முடிக்க முடியும்.

ராபர்ட் புரூஸ் என்ற அரசன் கதையை எடுத்துக் கொள்ளுங்கள். பலமுறை போர்முனையில் தோற்றான். கடைசிப் போரில் தோற்று ஒரு குகையில் ஒளிந்திருந்தான். அந்தக் குகையில் ஒரு சிலந்தி, வலைபின்னிக் கொண்டிருந்தது. அடிக்கடி சிலந்தியின் பின்னலில் நூலிழை அறுந்து போயிற்று. ஆனால், சிலந்தி விடவில்லை. மீண்டும் மீண்டும் தொடர்ந்து வலை பின்னும் முயற்சியில் வெற்றி கண்டது, இதனைக் கவனித்த அரசன் ராபர்ட் புருஸ், எழுச்சி பெற்றான். போருக்கு ஆயத்தமானான் போரிட்டான் வெற்றியும் பெற்றான். அதுபோல் தொடர்ச்சியாக நடைபெறும் உழைப்பு, வெற்றியை ஈட்டித் தரும்.

இன்று வேலை செய்யும் நேரத்தைவிட, ஓய்வு, இளைப்பாறுதல் - இந்த வகையில்தான் அதிக நேரம் செலவழிக்கப் பெறுகிறது. ஒரு கடமையைச் செய்து முடிக்கும்வரை இளைப்பாறுதல் என்ன வேண்டியிருக்கிறது? பணிகளுக்கிடையில் இளைப்பாறுவது மிகவும் தவறு. இடறினும் தளரினும் எனதுறு நோய் தொடரினும் உழைப்பினைத் தொடர்ந்து செய்தலுக்குரிய உறுதி தோன்ற வேண்டும்.

உழைப்பாளிகள் இழப்புக்கள், துன்பங்கள் இவைகளைப்பற்றிக் கூடக் கலங்க மாட்டார்கள். "வானம் துளங்கில் என்? மண் கம்பம் ஆகில் என்?" என்பது அவர்களுடைய நெஞ்சுறுதியுடன் கூடிய பாங்கு. இத்தகு மனப்பாங்கினைப் பெற்றவர்களே உலகில் மகத்தான காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அவர்கள் உச்ச நிலையை அடைந்தார்கள் என்றால், அவர்கள் திடீர் என்று தாவிக் குதிக்கவில்லை. மற்றவர்கள் தூங்கிக் கொண்டிருக்கும்போது, அவர்கள் உழைத்து முன்னேறினார்கள்.

என்று லாங்பெலோ கூறினார். நமது ஔவையாரும்,
“மெய்வருத்தம் பாரார், பசிநோக்கார், கண் துஞ்சார் எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்-செவ்வி அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார் கருமமே கண்ணாயினார்.”
என்றார்.

குறிக்கோளிலேயே கவனம் செலுத்துபவர்கள் உயர்வு, தாழ்வு, மானம், அவமானம் பார்க்க மாட்டார்கள். எவர் தீமை செய்தாலும் அத்தீமையைக் கண்டு அஞ்சிப் பணியிலிருந்து-உழைப்பிலிருந்து விலகார். காரியம் முடியும்வரை தூங்க மாட்டார்கள். பசியைப் பற்றிக் கவலைப்பட மாட்டார்கள். தான் எடுத்துக்கொண்ட இலட்சியத்தை நோக்கியே பயணம் செய்வார்கள்.

உழைப்பை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று அறிவுழைப்பு. மற்றொன்று உடலுழைப்பு. இவ்விரண்டு உழைப்புக்களிலும் உயர்ந்தது, தாழ்ந்தது என்பது கிடையாது. ஆனால் காலப்போக்கில் உடல் உழைப்பை இரண்டாம் நிலைக்குத் தள்ளியிருப்பதை இன்றைய சமூக அமைப்பு



உணர்த்துகிறது. அறிவுழைப்பாளிகள் உயர்ந்தவர்களாக மதிக்கப் படுகின்றனர். இது நெறிமுறையன்று. அறிவுழைப்பும் உடலுழைப்பும் இணைந்து செயல்பட்டால்தான் நாடு வளரும். இன்று உடலுழைப்பு குறைத்து மதிப்பிடப்படுவதால் அரசுப் பணிமனைகளில் ஏவலர்களாகக்கூடப் பணி செய்ய முன் வருகின்றனர். ஆனால் தோட்டப் பண்ணை அமைக்க முன் வருவதில்லை.

வாழ்வையும் வேலையையும் மதிக்காமல் வெறுக்கிறார்கள். இந்தத் திசையில் செல்லும் இளையோரை மடைமாற்றி இயற்கையான இயல்பூக்கம் நிறைந்த படைப்பாளிகளாக வாழும் நெறிக்கு அழைத்துச் செல்ல வேண்டும். நாம் எல்லாருமே அந்தத் திசையில்தான் செல்லவேண்டும்.

எல்லாம் வல்ல இறைவனே உழைப்புக்கு மதிப்புக் கொடுத்து, திருநாவுக்கரசருக்கு வாசியில்லாக் காசு கொடுத்தான்! திருநாவுக்கரசர் செய்தது கைத் திருத்தொண்டு. பார்வாழத் திருவீதிப் பணி செய்தது-அதாவது தெருவை சுத்தம் செய்தது. மதுரையில் எழுந்தருளியுள்ள ஆலவாயண்ணல், வைகை யாற்றங்கரையில் கொற்றாளாய்க் கூலிக்கு மண் சுமந்த வரலாறு, உழைப்பின் உயர்வை உணர்த்துவதாகும்.

இன்றைய இளைஞர்கள் பலர் பத்தாவது படித்து விட்டாலே மண்வெட்டி தூக்க விரும்புவதில்லை. “உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்”

என்று வள்ளுவத்தை உணர்தல் வேண்டும். உடலுழைப்பு இகழப்படும் நாட்டில் தேக்கமும், அழிவும் உண்டாகி வளர்ச்சிப் பாதை கடினமாகி விடுகிறது. உழைப்பு இகழப்படும் சமுதாயத்தில் பண்டப் புழக்கம் குறையும்.

ஆதலால், அறிவுழைப்பாளிகள் ஏழைகள் செய்யும் உடலுழைப்பைச் செய்ய முன்வர வேண்டும். உடல் உழைப்பாளிகள் அறிவாளிகளுடன், அறிவியல் மேதைகளுடன் கலந்து உறவாடித் தங்கள் உடலுழைப்பை அறிவியல் சார்ந்ததாக அமைத்துக்கொள்ள வேண்டும். அறிவுழைப்பாளிகளும் உடலுழைப்பாளிகளும் ஒன்று சேர்ந்து உழைத்து உலகியலை நடத்தும் போதுதான் மனித குலம் ஒன்றுபடும். அற்புதங்கள் நிகழும். நம்மிடத்தில், நம்முடைய சமுதாயத்தில், பல தீமைகளை அகற்ற உழைப்பு உதவி செய்யும்.

“சின்னச் சின்னக் கவலைகளால் அளிக்கப்படும் தொந்தரவு, குடித்தல், புகை பிடித்தல், காமந்தகாரனாகத் திரிதல், வறுமையில் கிடந்து உழலுதல், அழுக்காறு வயப்பட்டுப் புழுங்குதல்: வறுமொழியாளருடன், வம்பப்பரத்தருடன் கூடித் திரிதல், கோள் சொல்லுதல், பயணில் பேசுதல், சிறுசிறு கலகங்களைத் தூண்டி விடுதல்-செய்தல் முதலிய தீமைகள் இன்றைய இளையோரிடமிருந்து உழைப்பாலே விலகும்.” என்பது வால்டேர் கருத்து. இன்றைய தீமைகளுக்கெல்லாம் அடிப்படை உழைப்பின்மையேயாம்.

மனித சமுதாயத்தின் பிணிகளையும், துயரங்களையும் போக்கக்கூடிய தனிச் சிறப்பான மருந்து உழைப்பேயாம்.

சுட்டெரிக்கும் வெயிலில் தன் வியர்வையை முதலிட்டு சுமை தூக்கும் ஒரு தொழிலாளியை அட்டையில் காண்கிறீர்கள். இவன் தூக்கும் சுமை தான் இவனுக்கு சுகத்தை தருகிறது. இவன் குடும்பத்துக்கு சுகத்தை தருகிறது. அந்த சுமை இடம்மாறியதால் சமூகத்திற்கு சுகத்தை தருகிறது. ஆக, சுமை சுகமாவதற்கு உழைப்பு தேவைப்படுகிறது.

முயற்சிக்கும் உழைப்புக்கும் சில தடைகள் வருவதும் உண்டு. முதலில்



நிற்கும் பெரியதடை ஊழ். ஊழ்-விதி -வினை-தெய்வம் என்பன ஒரு பொருள் சொற்கள். நமது மக்களில் பலர் ஊழின் மீது அளவற்ற நம்பிக்கை வைத்து உழைக்காமலே வாழ்கின்றனர். உழைத்தாலும் ஊழின் துணை இல்லாது போனால் காரியம் கை கூடாது என்ற கருத்து நமக்கு இருக்கும்வரை ஊழை வெற்றி பெற இயலாது. “அடுத்து முயன்றாலும் ஆகும் நாளிலேயே ஆகும்.” என்பது அவர்கள் கூறும் பழமொழி. ஆனால் இது உண்மையன்று.

ஒரு காரியம் நிறைவேற எவ்வளவு உழைப்புத் தேவைப்படும் என்று ஓர் அளவிருக்கும். அதையும் சூழ் நிலையையும் ஆராய்ந்தறிந்து கணக்கிட்டுக்கொண்டு முறையாக அறிவார்ந்த உழைப்பு செய்யப் பெறின், வெற்றி கிடைக்கும். ஊழ், தடையாக இருக்காது. ஊழினை மாற்றுவதற்கே பிறப்பு. ஊழினை வெற்றிபெறப் பழக்கங்களை, வழக்கங்களை, வெற்றிபெற வேண்டும். நாள் தோறும் புத்துயிர்ப்பு பெறவேண்டும்.

அடுத்து உழைப்புக்கு ஒரு பெரிய தடை கடவுள் நம்பிக்கை - கடவுள் வழிபாட்டின் அடிப்படையில் தோன்றிய தவறான நம்பிக்கை. கடவுள் நம்பிக்கை தேவை கடவுள் வழிபாடும் தேவை. ஆயினும் கடவுளே எல்லாவற்றையும் தருவான் என்று விண்ணப்பித்தலில் என்ன பயன்? கடவுள் பருப்பொருள் எதையும் தரமாட்டான். தன் நம்பிக்கை, சோர்விலா மனம், உழைப்புக்குரிய ஆற்றல், இவையே கடவுளால் ஆன்மாக்களுக்கு வழங்கப் பெறுபவை. ஆதலால், கடவுள் நம்பிக்கையோ, வழிபாடோ மட்டும் வெற்றியைத் தந்துவிடும் என்று வாளா இருத்தல் கூடாது. உழைப்பாளர்களின் முன்னேதான் கடவுள் வாய்ப்புக்களை அருளிச் செய்கிறான். **ஆதலால் ஊழ், நல்ல நாள், கெட்ட நாள் என்ற எண்ணத்தில் உழைப்பை ஒத்திப்போடக் கூடாது. உழைப்பைத் தவிர்க்கக் கூடாது.** கடின உழைப்பே கடவுள் பக்தியின் அடையாளம். உழைப்பின் பயனை, ஆக்கத்தை, மற்றவர்க்கும் வழங்கி வாழ்விப்பது ஆக்கம்.

**உழைப்பு நிறைந்த வாழ்க்கையே நோன்பு. உழைக்கும் கால்களே தவம் செய்யும் தாள்கள்** என்றது புறநானூறு. உழைக்கும் எருதே நந்தி. கடவுட் கொடியின் சின்னம். ஏறுதான் இறைவன் ஊர்தி, எருது உழைப்பின் சின்னம், “உழுத நோன்பகடு அழிதின் றாங்கு” என்பது புறநானூறு. உழைப்புக்கு ஊக்கம் தேவை. ஒருவன் செல்வந்தனாய் இருப்பதை விட உழைப்பாளியாக இருப்பது உயர்வு. செல்வம் அழியும். உழைப்புத் திறன் அழியாது. ஊக்கம் என்பது உள்ள எழுச்சி, பணிமேற் செல்வதற்குரிய பாங்கு. ஔவைப் பாட்டியாரும் “ஊக்கமது கைவிடேல்” என்றார்.

உழைப்பின் அருமைப்பாட்டை உலகச் சிந்தனையாளர்கள் ஒரு குரலில் புகழ்கின்றனர். உன் கண் முன்னே பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்ந்து வந்துள்ள மனித நாகரீகத்தைப்

பார்! உன் முன்னே இருக்கும் மாட மாளிகை, கூட கோபுரங்களைப்பார். அவ்வளவும் ஆக்கம்! சென்ற காலத் தலைமுறையினுடைய படைப்பு! இந்த மகத்தான சாதனையைப் பார்த்த புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் பிரமித்து நிற்கிறான்! விண்ணில் உள்ள விண்மீன்கள் உழைப்பாளிகளின் உடலில் தோன்றியுள்ள கொப்புளங்கள், என்று பாடுகின்றான். “அறிவற்றவன் சிரத்தையுடன் கூடிய உழைப்பை இழந்தவன், கெடுப்பார் இல்லாமலே கெட்டுப்போகிறான்” என்றார் விவேகானந்தர்.

“உழைத்தால்தான் உணவு” என்ற சட்டம் வேண்டும் என்றான். ஜான்ஸ்மித். இந்தச் சட்டத்தை உலக நாடுகள் இயற்றவேண்டும். அதற்கு நாம் எல்லாரும் கீழ்ப்படிய வேண்டும்.

உழைப்புடன் கூடிய வாழ்க்கை சொர்க்கத்தின் கதவைக்கூடத் தட்ட உதவும்.

***உழைப்பை உயர்த்துங்கள்..!***
***உழைப்பால் உயருங்கள்..!***

## அருகி வரும் செண்பகத்தை காப்போம்

சித்திராப் பௌர்ணமி அன்று வல்வை இந்திர விழாவில் இராட்சத செண்பகம் காட்சிப்படுத்தப்பட்டது. மனிதனுக்கு தீங்கு விளைவிக்காத அதேநேரம், பூச்சி புழுக்களை மட்டும் உணவாக்கி, விவசாயத்தில் நன்மை பயக்கும் செண்பகம் தற்போது இங்கு வேகமாக அருகி வருகின்றது. ஈழத்தில் இந்த செல்லப் பறவை இவ்வாறு அருகிவருவதை கருத்தில் கொண்டு, “விழிப்புணர்வு“ நோக்குடன் காட்சிப்படுத்தப்பட்டது.






# வல்வெட்டித்துறையும் இந்திரவிழாவும்









பண்டைய தமிழ் நாட்டின் புகழ்பெற்ற விழாக்களில் ஒன்றே இந்திரவிழா. நாகை மாவட்டம் பூம்புகாரில் அகத்திய முனிவரால் சொல்லப்பட்டு செம்பிய மன்னனால் தொடங்கப்பட்ட இந்திர விழா நெடுக்கிள்ளி மன்னனால் கைவிடப்பட்டபோது பூம்புகாரை கடல் கொண்டது என்று மணிமேகலையில் சொல்லப்பட்டுள்ளது.

மழை காலத்தே பெய்ய வேண்டும் காலச்சீற்றம் பசி பிணி நீங்கி மாந்தர்கள் வாழ தேவர்களின் தலைவனான இந்திரனை நோக்கி சாதிய வேறுபாடுகள் இன்றி ஊர் மக்களால் எடுக்கும் பெருவிழாவே இந்திர விழாவாகும்.

பூம்புகாரின் துறைமுகப் பட்டிணத்தில் சோழ மன்னர்களின் வாரிசுகளின் வழிவந்தோர்களினால் வண்ணமயமான விளக்குகளினால் வீதியெங்கும் அலங்கரித்து ஆடல் பாடல்களோடு பல்வகை உணவுகளை வழங்கி சித்திரை மாத முழுநிலா நாளில் சித்திராப்பௌர்ணமி அன்று இந்திரலோகமாக காட்சி அளிக்கும்.

இலங்கையில் யாழ்ப்பாணத்தின் வல்வெட்டித்துறையில் மட்டுமே இந்த இந்திரவிழா முத்துமாரி அம்மன் கோவிலின் தீர்த்த உற்சவ நாளான அன்று இரவு மிகவும் பிரமாண்டமாக அதே சித்திரை முழுநிலா அன்று மிகவும் வண்ண விளக்குகளினால் சுமார் மூன்று நான்கு கிலோமீற்றர் தூர வீதிகளை அலங்கரித்து இசை நடனம் விருந்து என பார்ப்பதற்கு

கண்கொள்ளாக் காட்சியாகும். இங்கு விசேடமாக புகைக்குண்டு விடுவதை போல வேறு எங்கும் பார்த்ததில்லை.

ஆம் வல்வெட்டித்துறையும் ஒரு துறைமுக நகரமாகும். சோழர்களின் வழிவந்ததாக கூறும் வல்வெட்டித்துறை மக்கள் வீரத்திலும் புதுமைகளிலும் திறமையானவர்கள். முதன்முதலாக வல்வெட்டித்துறையில் இருந்து அமெரிக்கா வரை அன்னபூரணி என்ற கப்பலை ஓட்டிச் சென்றவர்களும் வியாபார மதிநுட்பங்களை அறிந்தவர்களாக இவர்கள் காணப்படுகிறார்கள்.
















# மருந்தில்லா மருத்துவம்



மனித மூளைக்கும், கம்ப்யூட்டருக்கும் இடையே இணைப்பை உருவாக்கி, அதன்மூலம் பல்வேறு நோய்களுக்கு தீர்வை காணும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது நியூராலிங்க் நிறுவனம். ஒருவருக்கு நோய் ஏற்பட்டால், அவருக்கு மருந்து கொடுத்து தீர்வு காண்பதுதான், வழக்கமான மருத்துவ அறிவியல். ஆனால், அதற்கு பதிலாக, கம்ப்யூட்டரில் இருந்து மனித மூளைக்கு சிக்னல் அனுப்பி, உடல் தன்னைத்தானே சரி செய்து கொள்ளும் வகையில் உருவாக்கியிருப்பதுதான் நியூராலிங்க் சிப். அந்த வகையில், ஆட்டிசம், பக்கவாதம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மூளையில் இந்த சிப் பொருத்தப்படும். இந்த சிப் மூளையின் செயல்பாட்டை தூண்டிவிட்டு, நரம்புகளை செயல்பட வைக்கும்போது, ஆட்டிசம், பக்கவாதம் உள்ளிட்ட பாதிப்புகள் சரியாகும் என்பதுதான் எலான் மஸ்க் நிறுவனத்தின் விளக்கம்.

அதாவது, மனித உடலில் ஏற்படும் நோய்களுக்கு எந்த மருந்தை கொடுத்தாலும், அதை செயல்பட வைப்பதற்கான உத்தரவுகளை கொடுப்பது மனித மூளைதான். மூளை உத்தரவு கொடுக்காவிட்டால், உடல் நன்றாக இருந்தாலும், அதில் இருக்கும் எந்த உறுப்புகளும் இயங்காது. ஆனால், இந்த சிப் பொருத்தப்படும்போது, கம்ப்யூட்டரில் இருந்து சிக்னல் அனுப்பி, உடல் உறுப்புகளுக்கு என்ன மாதிரியான உத்தரவுகளை மூளை கொடுக்க வேண்டும் என கட்டுப்படுத்தப்படும்.

இந்த வகையில், எந்த மருந்துகளும் இன்றி, கடந்த ஆண்டு நடுக்கவாத பாதிப்பை கம்ப்யூட்டர் சிப் மூலமே சரி செய்து, ஆச்சரியத்தில் ஆழ்த்தினார்கள் ஜெர்மனி மருத்துவர்கள். இதையே மேம்படுத்தி, பல்வேறு நோய்களுக்கு தீர்வு காணும் முயற்சிக்காக தயாரிக்கப்பட்ட உபகரணத்திற்கு டெலிபதி (Telepathy) என பெயர் வைத்துள்ளார் எலான் மஸ்க். இந்த உபகரணத்தை கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் குரங்குகளை வைத்து சோதனையை நடத்தியது நியூராலிங்க். அது வெற்றிபெற்றதை அடுத்து, மனிதர்களை கொண்டு சோதனை செய்ய நியூராலிங்க் நிறுவனத்திற்கு அனுமதி கொடுத்தது, அமெரிக்க உணவு மற்றும் மருந்துகள் கட்டுப்பாடு நிர்வாகம். இந்த சோதனைகள் வெற்றிகரமாக நடந்தாலும், இந்த சிப் சந்தைக்கு வர குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் ஆகும் என்கிறது நியூராலிங்க் நிறுவனம்.




பேராசிரியர். கலாநிதி. செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்,
தமிழ்த்துறை,
கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# 'ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் இனமுரண்பாடு'

## ஆய்வுநூல்

ஆய்வாளரான முருகையா சதீஸ் அவர்கள் கிழக்கிலங்கையின் திருகோணமலை மாவட்டம்: திரியாய் கிராமத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர். இவர் சிறந்த கதை சொல்லியாகவும், கவிதை சொல்லியாகவும் திகழ்கின்றார். இளம் வயதிலேயே ஆய்வுப்பரப்பினுள் தன்னை நிலைநிறுத்திக் கொண்டவர். இதுவரை நான்கு ஆய்வுநூல்கள் வெளிவந்துள்ளதுடன், சர்வதேச ஆய்விதழ்களிலும் சர்வதேச ஆய்வுமாநாட்டு மலர்களிலும் சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட இவரது ஆய்வுக்கட்டுரைகள் வெளிவந்துள்ளன. "ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் இனமுரண்பாடு" என்ற இப்படைப்பு இவரின் முதல் ஆய்வு நூலாகும். 2022ஆம் ஆண்டு, யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் வெளியீடாக வெளிவந்துள்ளது. இந்நூலைப் படிக்கும்போது ஒருவித மகிழ்ச்சி ஏற்பட்டது.

ஆய்வாளர் முருகையா சதீஸ் அவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் - தமிழ்த்துறையில் (முதலாம் வருடம் - புது முக வகுப்பில்) கற்கும் பொழுதே, அவரது ஆளுமையையும், திறனையும் அடையாளம் காணக்கூடியதாக இருந்தது. ஆய்வாளர்களுக்கென்று ஒரு தனி நடை இருக்கும். அந்த நடையில் அவர்களது ஆளுமை வெளிப்படும். முருகையா சதீஸ் அவர்களுக்கென்று தனியான நடை இருக்கின்றது. ஒரு விடயத்தை விளங்கி அதனைத் திறனாய்ந்து கூறும் மனப்பாங்குவிருத்தி இவரிடம் இருக்கின்றது.

இன முரண்பாடு பற்றி அரசியல் விஞ்ஞானக் கற்கை நெறியினரே பொதுவாகக் கதைப்பது வழக்கம். ஆனால் ஆய்வாளர் முருகையா சதீஸ் அவர்கள், ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளினூடாக இனமுரண்பாடு பற்றிக் கதைப்பது, அவரின் ஆளுமை

விருத்தியைக் காட்டுகின்றது. இந்தப் பேசுபொருளைப் பேச முன்வந்தமை பாராட்டுக்குரியது. பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் Being A Tamil And SriLanka என்ற ஆங்கில நூலில், தமிழர்களின் பிரச்சினை மையங்களை எடுத்துக்காட்டுவது இவ்விடத்தில் ஞாபகம் வருகின்றது. முருகையா சதீஸ் அவர்கள், மூன்று பகுதிகளாக இந்நூலைக் கட்டமைக்கிறார்.

“ஈழமும் இன முரண்பாடும்”, “சிறுகதைகளில் இன முரண்பாட்டின் பிரதிபலிப்பு”, “சிறுகதைகளில் இனமுரண்பாட்டின் எடுத்துரைப்பியல்” என்பவையே அவையாகும். முதலாம் இயலில்: இனமுரண்பாடு தோற்றம் பெறுவதற்கான காரணிகளைத் தனது மொழிநடையில் அலசி ஆராய்கின்றார். பின்னர் இனமுரண்பாடு என்றால் என்ன? என்பதை வரைவிலக்கணமாகக் கூறுகிறார். அத்துடன் சிங்கள - பௌத்த மேலாதிக்கக் கருத்தியல்கள், தேசியக்கொடி, பிரஜாவுரிமை பற்றிய கருத்தியல்களை முன்வைக்கின்றார். திட்டமிட்ட குடியேற்றம், தனிச்சிங்களச் சட்டம், நீதிமன்ற மொழி, தரப்படுத்தல், காணிச்சீர்திருத்தம், தடைச்சட்டங்கள், இன வன்முறைகள் எனச் சமூக - அரசியல் திறனாய்வு நோக்கில் தமிழரின் அடிப்படைப் பிரச்சினைகளை முன்வைக்கின்றார்.

அடுத்து “சிறுகதைகளில் இனமுரண்பாட்டின் பிரதிபலிப்பு” என்ற இயலில்: தமிழ்மொழி புறக்கணிப்பு, தோட்டங்களின் தேசிய மயமாக்கலின் மூலம் ஏற்பட்ட ஏமாற்றங்கள், மலையகத் தமிழரின் வாழ்வில் ஏற்பட்ட அவலங்கள் என்பவற்றை, 1980 - 1990 வரையான காலகட்டத்தில் எழுந்த ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளை மையமாக வைத்து நோக்குவது



சிறப்புக்குரியது. இனக்கலவரங்கள், இன மோதல்கள், இலங்கை இராணுவத்தின் வன்முறைகள், விமானத் தாக்குதல்கள், எறிகணைத் தாக்குதல்கள், இந்திய இராணுவத்தின் கெடுபிடிகள் என்பவற்றை 1980 - 1990 காலகட்ட ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளினூடாகச் சமூகவியல் நோக்கில் ஆராய்கிறார். இலங்கைத் தமிழரின் கடந்தகால அவலங்கள் பற்றிய தேடலுக்கு இந்நூல் முன்மாதிரியாக அமைகின்றது.

அடுத்த பகுதியாக, “சிறுகதைகளில் இன முரண்பாட்டின் எடுத்துரைப்பியல்” அமைகின்றது. கதைத்தலைப்பு, குறியீடு, சம்பவக் கோர்வைகள், தொன்மம், நனவோடை உத்தி, பின்னோக்கு உத்தி, கடிதமுறை உத்தி, நாட்குறிப்பு உத்தி, நோக்குநிலை, மொழிநடை, உரையாடல் என்ற முறையில் எடுத்துரைப்பியலைத் திறனாய்ந்து கூறுவது சிறப்பாக அமைகின்றது. இறுதியாகத் “தொகுப்புரை” அமைகின்றது. பொதுவாக ஆய்வுப்பரப்பில் அறிவியல் நோக்கிலான தீர்வினையே எதிர்பார்க்கிறார்கள். சதீஸ் அவர்களும், இனமுரண்பாட்டின் தீர்வு எவ்வாறு அமையவேண்டும் என்று தனது கருத்தியலை முன்வைப்பது சிறப்பாக அமைகின்றது.

எனவே இவர் மேலும் பல ஆய்வுகளை எழுதி வெளியிட வேண்டுமென்று வாழ்த்துகின்றேன். இவரின் ஆய்வு முயற்சிகளைப் பாராட்டுகின்றேன். பல சர்வதேச ஆய்வு மாநாடுகளைக் கண்டவர். பல சர்வதேச ஆய்விதழ்களில் எழுதியவர். இப்பொழுது தமிழ்ச் சமூகம் பயனுறும் வகையில் நூல்களை வெளியிடுவதில் ஆர்வம் காட்டுவது பாராட்டுக்குரியது.

## உணர்வுபூர்வமான புகைப்படம்



காஸா துயரத்தைப் பிரதிபலிக்கும் புகைப்படம் “வேல்ர்ட் பிரஸ்” புகைப்பட அறக்கட்டளையால் இந்த ஆண்டுக்கான சிறந்த படமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் புகைப்படத்தை ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவன புகைப்படக் கலைஞர் முகமது சலீம் கடந்த அக். 17-இல் எடுத்துள்ளார். அந்தப் படத்தில், காஸாவின் கான் யூனிஸ் நகரில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் தாயுடன் உயிரிழந்த குழந்தையின் உடலை அவரது உறவினர் சோகத்துடன் ஏந்தியிருக்கும் காட்சி இடம் பெற்றுள்ளது.



# கனத்துப் போன இதயங்கள்!

[சிறுகதை]

கவிமாமணி
இரஜகை நிலவன்
மும்பை

அன்று இ∴ப்தார்விருந்திற்கான இந்தியன் அசோசியேசன்சிலிருந்து வந்திருந்த அழைப்பை, கொஞ்சம் சோம்பலாக இருந்த பிறகும் வெள்ளிக்கிழமையின் விடுமுறை உல்லாசமும் விட்டு விட்டுப் போக வேண்டுமா? என்று யோசிக்க வைத்தது.

இருந்தாலும் இஸ்லாமிய நண்பர் பாட்ஷா அழைப்பை மறுக்க விரும்பாமல் எமிரேட்ஸ் இங்கிலிஷ் ஸ்பீக்கிங் ஸ்கூலுக்கு நண்பர்கள் ராம், அல்போன்ஸ் ஆகியோருடன் சென்றிருந்தேன்.

நல்ல வேளை எந்த வித டிராப்பிக்கும் இல்லாததால் 6.20க்கு போய்ச் சேர்ந்து விட்டோம். அன்று 6.22க்கு நோன்பு திறப்பதற்கு எல்லா நண்பர்களும் பெண்களும் காத்திருந்தார்கள். எல்லோரும் தொழுகை முடிந்ததும் தங்கள் முன்னால் வைத்திருந்த பழ வகைகளையும், இரச வகைகளையும் குடிக்க ஆரம்பித்தனர்.

முதலில் பாட்ஷாவைக் காணாமல் நான் நண்பர்களோடு திரும்பி விடலாம் என்று நினைத்த போதுதான் விரைவில் ஓடி வந்து “வாருங்கள் நண்பரே, உங்கள் அமைப்பிலிருந்து யாரும் வரவில்லையா? நான் நரசிம்மனிடம் சொல்லி யிருந்தேனே. நீங்கள் மூவர் மட்டும்தான் வந்தீர்களா?” என்று என்னை கட்டித் தழுவிக் கொண்டார்.

“பாட்ஷா நான் உங்கள் அழைப்பை இ.மெயிலில் தான் பார்த்தேன். மற்ற அங்கத்தினர் எல்லோருக்கும் அமைப்பிலிருந்து அழைப்புப் போயிருக்கும். ஒரு வேளை பிந்தி வருவார்களோ.. என்னவோ...” கொஞ்சம் மழுப்பினேன்.

“என்ன சார் சொல்கிறீர்கள் நோன்பு திறப்பதற்கு கரெக்டாக வரவில்லையென்றால் அதன் பிறகு வரமாட்டார்கள். பரவாயில்லை. துபாயின் எல்லா அமைப்புகளிலிருந்தும் பல நண்பர்கள் வருவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் சரி என்ன செய்வது நீங்கள் அமருங்கள். நோன்பு திறப்பு நிகழ்ச்சி ஆரம்பித்து விட்டது.

நீங்களும் அமர்ந்து பழங்களை சாப்பிடுங்கள். பின் ஜூஸ் மோர் எல்லாம் இருக்கிறது. அருந்துங்கள், சாப்பிட்ட பிறகு பேசலாம். அமருங்கள். நோன்புத் திறந்த கொஞ்ச நேரத்தில் எல்லோரும் பள்ளிக்குச் சென்று வருவோம். நீங்கள் அமர்ந்திருங்கள். நாங்கள் ஐந்து நிமிடத்தில் வந்து விடுவோம். போய்விட வேண்டம். நாங்கள் வந்தவுடன் இரவு உணவு ப.ஃ.பே சிஸ்டம் ஆரம்பித்து விடும். நண்பர்களோடு சாப்பிட்டு விட்டுச் செல்லலாம்.” என்றவர் பள்ளிக்கு போய் தொழுகை எல்லாம் முடித்து விட்டு வந்தார்.

எல்லோரும் உணவு உண்ண ஆரம்பிக்க, “அப்புறம் பாட்ஷா சொல்லுங்கள். இப்போது கலை நிகழ்ச்சிகள் எதுவும் நடத்த வில்லையா?” என்று ஆரம்பித்தேன். உணவுத்தட்டைக் கையில் எடுத்துக் கொண்டு.

“ஏன் சார்? கலை நிகழ்ச்சிகளா இப்போது துபாயில் முக்கியம்?” என்று சிரித்துக் கொண்டே கேட்டார் கையிலிருந்த உணவை சுவைத்துக் கொண்டே.........

“ஆறு நாட்கள் எந்திரமாய் அலைகிறோம். ஒரு ரிலாக்ஸிற்காக நிகழ்ச்சி ஏதாவது..”

என்று நான் சொல்லி முடிப்பதற்குள்

“துபாயில் மிக முக்கியமான விஷ



யங்கள் நிறைய செய்ய வேண்டியிருக்கிறது தெரியுமா....?” சிரித்துக் கொண்டே கேட்டார்.

“சொல்லுங்கள்....” என்றேன்.

“மூன்று இந்தியர்களின் உடலை அவர்கள் வீட்டிற்கு முதலில் அனுப்பி வைக்க வேண்டும். அதற்கான முயற்சிகளை எந்த அமைப்பாவது செய்ய முன் வருகிறதா....” என்றார்.

“ஆனால் பாட்ஷா இந்தியர்கள் இறந்தால் அவர்கள் கம்பெனியே அவர்கள் உடலை...” என்று நான் முடிக்குமுன்னே......

“இவர்கள் ஒழுங்கான விசா இல்லாமல் ஒளிந்து வேலை செய்தவர்கள். விபத்தில் இறந்தவர்கள், இவர்களில் ஒருவர் உடலை இந்தியாவிற்கு அனுப்ப நம்முடைய பணத்திற்கு பத்து லட்சத்திற்கு மேலே செலவழியும் அதை எந்த அமைப்பாவது செய்ய முனைகிறதா.. ஏதோ கலைநிகழ்ச்சிகள் என்று சொல்லி கூடி சாப்பிட்டு விட்டு சார், நாமெல்லாம் ஒரு வகையிலே கையாலாகாதவர்கள். ஏதோ பாட்டுப் போட்டி, பட்டி மன்றம் இல்லையெனில் சினிமா நடிகர், தமிழ் நாட்டின் பிரபலங்களை அழைத்து மகிழ்ந்து போய் விட்டுப் போகிறமே ஒழிய இந்த மாதிரி ஏதாவது நல்லது செய்ய முயற்சிக்கிறோமா?”

நான் கொஞ்சம் கோபத்துடன் “ஏன் நீங்கள் கூட உங்கள் அமைப்பின் மூலம் இந்த நல்லவைகளைச் செய்யலாமே...” என்றேன்.

“உங்கள் கோபம் முகத்தை சிவப்பாக்கி விட்டது.” என்று சிரித்தவர்,

“நான் இப்போது அதைத்தான் செய்து கொண்டிருக்கிறேன். இறந்தர்கள் மூவரும் இந்துக்கள். நான் இஸ்லாமிய மதத்தைச்சேர்ந்தவன். நான் எதற்காக இந்த உதவியைச் செய்ய வேண்டும்..

ஏனென்றால் அவர்கள் என் இந்திய நண்பர்கள். முடிந்தால் கலை நிகழ்ச்சியை நிகழ்த்துவதை விட இப்படி நல்ல காரியங்கள் ஏதாவது செய்ய முயற்சி செய்யுங்கள். முடிந்தால் உங்கள் அமைப்பின் மூலம் இந்த மாதிரி நல்ல காரியங்கள் செய்ய முயற்சியுங்கள்.

கலை நிகழ்ச்சிகள் தேவைதான். வேண்டாமென்று சொல்ல வில்லை. ஆனால் இங்குள்ள சட்ட திட்டங்கள் நம்மை பல விஷயங்களில் எதுவும் செய்ய முடியாமல் தடுத்து விட்டாலும் நமது இந்திய நண்பர்களுக்கு ஏதாவது நல்லது செய்தோமானால் அட்லீஸ்ட் நம்முடைய அமைப்பிற்கு நல்ல பெயரும் நமக்கு ஆத்ம திருப்தியும் கிடைக்கும்.” என்றார்.

நான் நண்பர்களோடு உணவை முடித்து விட்டுத் திரும்பும் போது வயிறு மட்டுமல்ல இதயமும் கனத்துப் போயிருந்தது.

# ஐக்கிய அரபு அமீரகத்தில் முதலாவது இந்து கோயில்



ஐக்கிய அரபு அமீரக தலைநகர் அபுதாபி அருகே உள்ள அபு முரேகாவில் அந்நாட்டின் முதலாவது இந்து கோயில் கட்டப்பட்டுள்ளது. இக்கோயில் கட்டுமானப் பணிகளுக்கு 2019-ஆம் ஆண்டில் இந்திய பிரதமர் மோடி அடிக்கல் நாட்டியிருந்தார். கோயிலின் கட்டுமானப் பணிகளை பிஏபிஎஸ் (BAPS) அமைப்பு மேற்கொண்டது, இந்நிலையில், 2 நாள் பயணமாக ஐக்கிய அரபு அமீரகத்திற்கு சென்ற இந்திய பிரதமர், கோயில் திறப்பு விழாவில் பங்கேற்றார்.

கோயில் கட்ட 2015-ஆம் ஆண்டில் ஐக்கிய அரபு அமீரகத்தின் அப்போதைய பட்டத்து இளவரசரும், தற்போதைய அதிபருமான பின் சயீத் அல் நஹ்யான், 27 ஏக்கர் நிலம் வழங்கினார். இந்தக் கோயில் மத நல்லிணக்கத்தை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. அதாவது, இஸ்லாமிய மன்னர் இந்து கோயிலுக்காக நிலத்தை நன்கொடையாக வழங்கினார். கோயிலைக் கட்டியவர் கத்தோலிக்க கிறிஸ்தவர், கட்டடத்தின் திட்ட மேலாளர் சீக்கியர், அடித்தள வடிவமைப்பாளர் புத்த மதத்தைச் சேர்ந்தவர். கட்டுமான நிறுவனம் ஒரு பார்சி குழு, நிறுவனத்தின் இயக்குனர் ஜைன பாரம்பரியத்தில் இருந்து வந்தவர்.

27 ஏக்கரில் பரந்து விரிந்துள்ள இந்தக் கோயில், 700 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ளது. கோயிலின் வெளிப்புற சுவரில், அனைத்து கலாசாரங்களையும் பிரதிபலிக்கும் வரலாறுகளும், இந்து கடவுள்களின் உருவங்களும் இடம் பெற்றுள்ளன. கோயிலின் வெளிப்புறத்தில் ராஜஸ்தானின் இளஞ்சிவப்பு கற்களும் உட்புறத்தில் இத்தாலியின் வெள்ளை பளிங்கு கற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. எந்த இடத்திலும் ஒரு இரும்புக் கம்பி கூட பயன்படுத்தப்படவில்லை.

கோயிலின் பீடத்தில் இந்திய நாகரிகம் தவிர, மாயா, எகிப்தி, அரபு, ஐரோப்பிய, சீன மற்றும் ஆப்பிரிக்க நாகரிக வரலாறுகளும் இடம்பெற்றுள்ளன. மொத்தமுள்ள 7 கோபுரங்களில் ராமர், சிவன், ஜெகன்னாதர், கிருஷ்ணர், ஏழுமலையான் மற்றும் ஐயப்பன் சிலைகள் உள்ளன. ஏழு கோபுரங்களும் ஐக்கிய அரபு அமீரகத்தின் ஏழு அமீரகங்களைக் குறிக்கின்றன.

ஐ.வி.மகாசேனன்



# என் கால்கள் வழியே... 4

## டெல்லியில் முதல் நாள்!

செப்டெம்பர்-13 காலையில டெல்லி வந்தாச்சு. ஆம். இந்த 13ஆம் நம்பர் கதையையும் சொல்லிடுவோம். “இலக்கம் 13” இராசியற்றது என்பது பொது மரபு. இது உலக மரபென்றே சொல்லிடலாம். இங்கு பொது மற்றும் உலக என்ற சொல்லாடல்களை மேற்கத்தேய உலகமே நிரப்பியுள்ளது. ஏனெனில் கீழைத்தேய ஆசிய மரபில் அவ்வாறான நம்பிக்கைகள் இல்லை. மேற்கின் எண்ணங்களே உலக எண்ணமாய் வியாபித்துள்ளது. மேற்கு நாடுகளில் பல இடங்களில் 13ஆம் இலக்கம் பயன்படுத்தப்படுவது தவிர்க்கப்படுகின்றது. 12இற்கு பிற்கு 14இனை இட்டு செல்கின்றார்கள். பல கட்டிடங்களிலும் மாடிகளில் அறைகளில் 13ஆம் இலக்கத்தை இடுவதில்லை. “இலக்கம் 13” பற்றிய பயம் மற்றும் தவிர்ப்பை Triskaidekaphobia என அழைக்கின்றனர்.



மரபுரீதியாக இலக்கம் 13 பற்றிய எதிர்மறையான எண்ணங்களுடன் “இலக்கம் 12” மீதான அதிர்ஷ்ட பார்வையும் இணைகிறது. ஜோ நிக்கல் எனும் அறிஞர் இது தொடர்பான ஆய்வில் சில கருத்துக்களை முன்வைக்கின்றார். இலக்கம் 12 என்பது பெரும்பாலும் முழுமையை குறிக்கிறது என்று அவர் சுட்டிக்காட்டுகிறார். வருடத்தில் மாதங்களின் எண்ணிக்கை, ஒலிம்பஸில் உள்ள கடவுள்கள், இராசி அறிகுறிகள் மற்றும் இயேசுவின் சீடர்கள் என மேற்கத்தேய நம்பிக்கைகளில் 12 முழுமையானதாக அமைகின்றது. இந்த நன்மை மற்றும் பரிபூரண உணர்வுடன் 13 முரண்படுகிறது. இதுவும் ஓர் காரணமாகின்றது.

இன்னும் சிலர் ஐரோப்பிய மத நம்பக்கையின் மரபை விளக்கி நிற்கிறார்கள். நார்ஸ் (Norse) என்பது ஐரோப்பாவின் புராதன மதங்களில் ஒன்றாகும். இம் மத புராணங்களில், லோகி எனும் கடவுள் வல்ஹல்லாவில் நடந்த விருந்துக்கு 13வதாகவே வந்திருந்தார். அங்கு அவர் மற்றொரு பங்கேற்பாளரை ஏமாற்றி பால்தூர் எனும் கடவுளைக் கொன்றார். கிறிஸ்தவ மதத்தில், இயேசுவைக் காட்டிக் கொடுத்த சீடன் யூதாஸ் கடைசி இரவு உணவில் 13வது விருந்தினராக இருந்தார். இவ்அடிப்படைகளில் இலக்கம் 13 மீது அச்சமும் தவிர்ப்பும் ஐரோப்பிய மரபில் ஏற்பட்டுள்ளது.

Flight Ticket போடும் போது இலக்கம் 13 பற்றிய எதிரான உரையாடல்களை யோசிக்கவில்லை. எனது பயணத் திகதியை என் விரிவுரையாளரிடம் சொல்லும் போது தான் வேறு திகதி போட்டிருக்கலாமேனு கேட்டார். அவர் சொல்லும் போது தான் இலக்கம் 13-இல் உள்ள குழப்பமும் என் சிந்தனைக்குள்ள வந்து போய்ச்சு. ஆனா இந்த புலமைப்பரிசில் விண்ணப்பிக்க தொடங்கினதில இருந்தே நான் குழம்பிட்டு தானே இருக்கன். ஆஹ இந்த இலக்க




குழப்பம் ஒன்னும் புதுசா குழப்பிட போறதில்லை என்டது மனத்தைரியம். இரண்டு வருட முடிவில தான் தெரியும்.

“இலக்கம் 13” அதிஷ்டமா? அதிஷ்டமற்றதா?

சரி டெல்லி விமான நிலையத்தில வந்து இறங்கியாச்சு. விமான நிலையத்தில வருகையை பதிவு செய்யுற இடத்துக்கு வந்தா, அங்க இலவச றுை-குை வசதிக்கு கடவுச்சொல் பெறுற இயந்திரம் இருந்திச்சு. நமக்கு இது புது அனுபவம். அவ்இயந்திரத்தை பயன்படுத்த தெரியாது. ஏதோ எல்லாம் செய்து பார்த்தம் கடவுச்சொல் வந்த மாதிரி இல்லை. பிறகு யாரோ ஒரு பயணி அனுபவசாலி போல வந்தார். கடவுச்சீட்டை இயந்திரத்தில் ளுஉயெ செய்தார். கடவுச்சொல் ஒரு துண்டாக வந்திச்சு. எடுத்திட்டு போனார். நாமளும் அவரை பிரதி செய்தம். ‘Wi-Fi’ கடவுச்சொல்லை பெற்று, இணைய வசதியை பெற்றோம். வருகையை பதிவு செய்து, விமான நிலைய வெளி வளாகத்திற்கு வந்தோம்.

வெளிய வந்து, கைத்தொலைபேசிய தூக்கின இணையவசதி இல்லை. ‘Wi-Fi’ தொடர்ச்சியாக பயன்படுத்தாத போது Logout ஆஹி விடுகிறது. மீள Login பண்ணனும். ஆனா நமக்கு தானே எதையும் பேணுற பழக்கம் இல்லை. கடவுச்சொல் துண்டை வருகையை பதிவு செய்ற இடத்தில விட்டிட்டு வெளியே வந்திட்டேன். ஆஹ இணையவசதி

இல்லாம போயச்சு. டெல்லி வருவதற்கு முன்னர் தமிழ்நாட்டு நண்பர் ஒருவரின் பழக்கத்தினூடாக, டெல்லி பல்கலைக்கழத்தில் படிக்கிற தமிழ்நாட்டை சேர்ந்த ஒருவரின் தொடர்பு கிடைத்திருந்தது. டெல்லி வந்து அழைப்பெடுத்தா, தாங்கள் தங்கும் இடத்திற்கான விபரத்தை தருவதாக கூறியிருந்தார். எனினும் இணையவசதி இன்மையால் தமிழ்நாட்டு நண்பரோடு தொடர்பு கொள்ள முடியவில்லை. என்னோடு வந்த சிங்கள நண்பிகள் கடவுச்சொல்லை பாதுகாப்பாக வைத்திருந்ததால், அவர்கள் ஏற்கனவே டெல்லி பல்கலைக்கழகத்தில் படிக்கும் சிங்கள மாணவர்களுக்கு தொடர்பு கொண்டு நாங்கள் டெல்லி வந்த விபரத்தை கூறியதும், அவர்கள் விமான நிலையத்துக்கு தாங்கள் வருவதாக கூறினார்கள். காத்திருந்தோம்.

7.30 மணியளவில் சிங்கள மாணவிகள் விமான நிலையத்திற்கு வந்தார்கள். அவர்கள் எமது நிகழ்வை ஏற்கனவே திட்டமிட்டிருந்தார்கள். ஆதலால் அவர்களின் வழிகாட்டலிலேயே நாம் பயணித்தோம். முதலில் நாம் டெல்லி வந்த திகதியை எமது இந்திய புலமைப்பரிசிலின் ‘ICCR’ அலுவலகத்தில் பதிய வேண்டுமென கூறினார்கள். டெல்லி ‘ICCR’ அலுவலகத்தின் பிராந்தியக்கிளை டெல்லி பல்கலைக்கழகத்திலேயே இருப்பதால், எமது பல்கலைக்கழகத்திற்கே நேராக கூட்டிச்சென்றார்கள். ருடிநச பயணம் டெல்லி வந்ததும் ஆரம்பிச்சிட்டு. டெல்லி விமான நிலையத்திலிருந்து எமது பல்கலைக்கழக வளாகத்துக்கான பயணம் ஏறத்தாழ ஒரு மணித்தியாலம். புதிய இடம் டெல்லியை பார்ப்பம்னு ஆசையாய் காரின்ட முன் ஆசனத்தில ஏறி இருந்தாலும், பயணக்களைப்பும் தூக்க கலக்கமும் ஆழ்ந்த உறக்கத்துக்கு கொண்டு போயட்டு. ஏறி இருந்ததும் பல்கலைக்கழக வாசலில வந்து இறங்கினதும் தான் ஞாபகம். அன்றைய நாள் முழுவதும் பல்கலைக்கழக பதிவு வேலைகளுடனேயே கழிந்து விடும் என்பது, 9 மணி போல பல்கலைக்கழக வளாகத்தில் வந்து இறங்கிய போது அறியவில்லை. காலையிலிருந்து மதியம் வரை ICCR அலுவலகத்தில் புலமைப்பரிசிலுக்கான பதிவுகள். மதியத்திற்கு பின்னர் டெல்லி பல்கலைக்கழகத்தின் வெளிநாட்டு மாணவர்களுடைய பதிவு அலுவலகத்தில் கற்கைக்கான அனுமதி பதிவுகள். அன்றைய நாள் முழுவதும் எனது பொதிகள் ஐஊஊசு அலுவலகத்தில் காலையில் போட்டது. இரவு 7 மணி போல பதிவுகள் முடிய பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறிய போதே எடுத்துக்கொண்டோம். நான் ஒரு சிறு பொதியோடு வந்தது இறைவன்



கருணை என உள்ளார நினைத்து கொண்டேன்.

இடையே எங்களை அழைத்து வந்திருந்த சிங்கள சகோதரிகளின் தொலைபேசியிலிருந்து, தமிழ்நாட்டு நண்பர் மூலமான அறிமுகமான டெல்லி பல்கலைக்கழக நண்பருக்கு நான் பல்கலைக்கழகத்துக்கு வந்த செய்தியை அறிவித்தேன். அவர்களும் உடனடியாக வந்து தொடர்ச்சியான உதவிகளை செய்து கொடுத்தார்கள். தமிழகம் ஈழத்தமிழர் மீது என்றும் அன்பு கொண்டது என்பதும் தனது சேயாக பாசத்தை பகிரும் என்பது நான் எனது தமிழக பயணங்களில் உணர்ந்துள்ளேன். அவ்வாறானதொரு உணர்வையே தொலைபேசி அழைப்பில் நான் பல்கலைக்கழகம் வந்துவிட்ட செய்தி அறிவித்த உடன் வந்த நண்பன் லோகேஷின் அன்பில் உணர்ந்தேன். இதற்கு முன்னர் எவ்வித பழக்கமும் இல்லை. தமிழக நண்பன் பாரியிடமே உதவியை கேட்டேன். பாரி தனது நண்பர்க;டாக தொடர்பு கொண்டு அந்நண்பரின் நண்பராகவே லோகேஷின் அறிமுகம். லோகேஷ் வந்த பின்பு தான் தமிழ்ல கதைக்க கூடியதா இருந்திச்சு. அதே பெரிய சந்தோசம். தோடர்ச்சியாக பதிவு வேலைகளில் லோகேசும் என்கூட இணைந்தான்.

இப்பதிவில், டெல்லி பல்கலைக்கழகத்தின் வெளிநாட்டு மாணவர்களுடைய பதிவு அலுவலக நிர்வாகத்தின் மெத்தனப்போக்கினை பதிவிடுவதே இந்த அத்தியாயத்திற்கு முழுமையை கொடுக்கும். ஆம். வெளிநாட்டிலிருந்து புதிதாக வருபவன். ஏற்கனவே மின்னஞ்சல் தொடர்புகளுக்கு சரியான பதில் இல்லை. வெளிநாட்டு மாணவர்களுக்கு நிச்சயமாக விடுதி வசதிகள் உண்டு என்பதே, ஏற்கனவே ஐஊஊசு புலமைப்பரிசில் பெற்று இந்தியாவின் வேறு மாநில பல்கலைக்கழகங்களுக்கு சென்ற நண்பர்களின் அனுபப்பகிர்வு. அந்த நம்பிக்கையிலேயே நான் பல்கலைக்கழக பதிவு வேலைகளை செய்யும் போது கொண்டிருந்தேன். பதிவு வேலைகள் முழுமையடைய இரவு 7.00 மணியளவு ஆஹிட்டுது. அந்த நேரம் வெளிநாட்டு மாணவர்களுடைய பதிவு அலுவலக அதிகார நிர்வாகி, “விடுதி வசதி இல்லை, பல்கலைக்கழக சூழலில் தனியார் விடுதிகள் உள்ளது அங்கு சென்று தங்குமாறு” கூறினார். நான் மொழிப்பிரச்சினை மற்றும் டெல்லிக்கு புதியவன் என்ற எனது மறுகருத்தை தெரிவிக்கையில், அவர் அதனை உள்வாங்க மனமில்லா நிலையையே வெளிப்படுத்தியிருந்தார். வெளியே போகலாம் என்பதை உடல் மொழிகளிலேயே வெளிப்படுத்தினார்.

உண்மையில், அன்றைய தினம் சிங்கள சகோதரிகளதும், தமிழ்நாட்டு நண்பர்களும் உதவி கிடைக்கப்பெறாவிடில் பெரும் நெருக்கடிக்குள்ளேயே சென்றிருப்பேன். புரியாத மொழி. புதிரான இடம்.

தமிழ் நாட்டு நண்பர்களின் பழக்கத்தை டெல்லி வருவதற்கு முன்னரே ஏற்படுத்திக்கொண்டமையால்,

பல்கலைகழகம் விடுதி மறுக்கப்பட்ட நிலைமையில் அவர்களே அடைக்கலம் தந்தார்கள். அதுவரை பதிவு வேலையாக திரிந்தமையால் காலையிலிருந்து சாப்பிடவே இல்லை என்பதை உணர முடியவில்லை. இரவு றிச்சா வண்டியில ஏலம் பேசி தமிழ் நாட்டு நண்பர்களின் அறைக்கு போயாச்சு. போகும் போது எந்த யோசனையுமில்லை. இனி ஒரு மாதம் இங்க தான் தங்க போறன் என்ற எந்த எண்ணமுமில்லை. இன்று தங்குவதற்கு இடம் கிடைத்தது என்ற மகிழ்ச்சியே. அன்று இரவே தமிழ் நாட்டு நண்பன் லோகேஷ் தன்னுடைய ஆதார் பதிவிலேயே எனக்கு இந்திய தொலைபேசி இலக்கத்தை பெற்று தந்தான். ஒரு 12-13 மணித்தியாலங்களின் பின் என் குடும்பத்தாரோடு தொடர்பு கொள்ள முடிஞ்சுது. பயணங்களை அலாவினேன். களைப்பும் பசியும் போயாச்சு.

ஏற்கனவே விரிவுரைகள் ஆரம்பித்து நிலையில் மறுநாள் (செப்டெம்பர்-14) முதல் விரிவுரைகளுக்கு செல்வோம் என்ற எதிர்பார்ப்புகளுடன், புதிய இடம், பெருங்களைப்பு ஆழ்ந்த உறக்கம்.

முதல் நாள் பல்கலைக்கழகம், முதல் நாள் விரிவுரை என்பதுடன், தொடர்ந்து பயணிப்போம்....

தொடரும்....

## சிறப்பாக நடந்த மகளீர் இல்ல ஆண்டுவிழா

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 42வது ஆண்டு நிறைவு விழா 27.04.2024 தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் அமைந்துள்ள ஸ்ரீ அன்னபூரணி மண்டபத்தில் செஞ்சொற்செல்வர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இவ் நிகழ்விற்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் அவர்கள் பிரதம விருந்தினராகவும், வைத்திய கலாநிதி குமாரலோஜினி அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி அம்பிகை சிவஞானம் அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.







ABAYAM
அபயம்

# அபயம் இரகசியம் பேணும்

## இலவச வைத்திய தொலைபேசி அழைப்பு சேவை

# 071 07 12345



**மனநெருக்கடிகளில் இருப்பவர்களும், அவர்களது உள்ளம் உயிர் காக்க துணை நிற்பவர்களும் தொடர்பு கொள்ளக்கூடிய அவசர அழைப்பு**

(போதைப்பொருள் பாவனையில் இருந்து மீள நினைப்பவர்களும் இச் சேவையை பயன்படுத்தலாம்)



தங்களால் வழங்கப்படும் சுயவிபரங்கள் மற்றும் தகவல்கள் யாவும் இரகசியமாக பேணப்படும்.

**24 மணிநேரமும் வைத்தியரையும், ஆலோசகரையும் உடனடியாக தொடர்பு கொள்ளலாம்**

பாதிக்கப்பட்டவர்களோ அல்லது அவர்களை காண்பவர்களோ (உறவினர், நண்பர்கள், நலன்விரும்பிகள்) இச்சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம்.

பங்குனி 2021

அபயம் நிறுவனம்
மானிப்பாய், யாழ்ப்பாணம்

# பட்டினத்தாரின் தாய்ப் பதிகம்



பட்டிணத்தார் சுடுகாட்டில் தன் தாய்க்கு ஈமச்சடங்கு செய்தபோது பாடிய பத்து பாடல்களும் மிகவும் சிறப்பு வாய்ந்தவை.

பட்டினத்தடிகள் துறவியாக ஊர் ஊராகத் திரிந்து கொண்டிருந்த காலத்தில் அவருடைய அன்னையார் மரணமடைந்தார். ”அவருடைய ஈமச்சடங்கை நான் எங்கிருந்தாலும் வந்து செய்து தருவேன்” என்று வாக்களித்திருந்த படி பட்டினத்தடிகள் சரியான நேரத்தில் சுடுகாட்டிற்கு வந்து சேர்ந்தார்.

அவருடைய தாயின் சிதைக்காக உறவினர்கள் அடுக்கியிருந்த காய்ந்த விறகுகளை அகற்றிவிட்டு பச்சை வாழைமட்டைகளையும் இலைகளையும் கொண்டு சிதையடுக்கி, ”ஐயிரண்டு திங்களாயங்கமெலா நொந்து பெற்று” என்று பாடத் தொடங்கி, தம் தாயாரை தீயுண்ணச் செய்து தம் தாய்க்குரிய கடனைக் கழித்தார்.

அந்தப் பாடல்கள் மிகப் புகழ்பெற்றவை.
தாயாருக்குத் தகனக்கிரியை செய்யும்போது பாடியவை.

1. ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி ?

2.முந்தித்தவம் கிடந்து முந்நூறு நாள் அளவும்
அந்திபகலாச் சிவனை ஆதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டுவேன் ?

3. வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும், தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டுவேன் ?

4. நொந்து சுமந்து பெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே - அந்தி பகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றும் தாய் தனக்கோ
மெய்யிலே தீமூட்டுவேன் ?

5. அரிசியோ நான் இடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் - உருசியுள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே என அழைத்த வாய்க்கு ?

6. அள்ளி இடுவது அரிசியோ ? தாய் தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ ? கூசாமல் மெள்ள
முகம்மேல் முகம்வைத்து முத்தாடி - என்றன்
மகனே” என அழைத்த வாய்க்கு ?

7. முன்னை இட்ட தீ முப்புரத்திலே
பின்னை இட்ட தீ தென் இலங்கையில்
அன்னை இட்ட தீ அடிவயிற்றிலே
யானும் இட்ட தீ மூள்க! மூள்கவே!

8. வேகுதே தீயதனில் வெந்து பொடி சாம்பல்
ஆகுதே பாவியேன் ஐயகோ! - மாகக்
குருவிபறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை.

9. வெந்தாளோ சோணகிரி வித்தகா! நின்பதத்தில்
வந்தாளோ! என்னை மறந்தாளோ - சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்துவரம் கிடந்துஎன்
தன்னையே ஈன்றெடுத்த தாய் ?

10. வீற்றிருந்தாள் அன்னை வீதிதனில் இருந்தாள்!
நேற்றிருந்தாள் இன்று வெந்து நீறானாள் - பால்தெளிக்க
எல்லீரும் வாருங்கள்! ஏதென்று இரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்!

துறவியே ஆகிப் போனாலும் ஒவ்வொரு ஆண்மகனும் தம் தாய், தந்தையருக்கு செய்யும் கடமைகளை மறவாது நிறைவேற்றி முன்னோர்கள், ஞானிகள், சித்தர்கள் ஆகியோரின் ஆசிகளை பெறுவோம்...

# தமிழ்ப் பேரறிஞருக்கு இதய அஞ்சலி

யாழ்ப்பாணம் மாவிட்டபுரம் பண்டிதர் கதிரிப்பிள்ளை உமாமகேசுவரன் ஞாயிற்றுக்கிழமை 21.04.2024 அன்று சிவபெருமான் திருவடி நீழலை அடைந்தார்.

பன்னிரு திருமுறை முழுவதையும், 1254 பதிகங்கள், 18,268 பாடல்கள், கோயில் வரலாறு, அருளாளர் வரலாறு, ஆசியுரைகள் என அச்சுப் பதிப்புக் காலங்களில் (1997-1998) மயிலாடுதுறை தருமபுரம் திருமடத்தில் ஓராண்டுக்கு மேலாகத் தங்கி இருந்தும், இரண்டாவது முறையாகத் தமிழகம் வந்து (2000-2001) சென்னை, தியாகராயநகர்



தருமபுரம் திருமடக் கிளையில் பல மாதங்கள் தங்கி இருந்தும் மெய்ப்புப் பார்த்த பெருமகனார்.

தருமபுரம் ஆதீனம் 26ஆவது குருமகாசந்நிதானம் தவத்திரு சண்முக தேசிக ஞானசம்பந்த பரமச்சாரியாரின் ஆலோசகராக அக்காலங்களில் பணிபுரிந்தார். தமிழில் கற்றுத் துறை போதிய புலமையாளர். யாப்பு இலக்கணம் கைவரப் பெற்றவர். வடமொழியை நன்கு கற்றறிந்தவர். ஆங்கில மொழி ஆசிரியராக இலங்கையில் பல பாடசாலைகளில் பணிபுரிந்தவர். ஆங்கிலத்தில் வித்தகர்.

பன்னிரு திருமுறையின் 23 திருப்பண்களையும் வகை தெரிந்து பிரித்தறிபவர். ஒவ்வொரு பண்ணிலும் விரிவுகளையும் சார்புகளையும் வேறுபாடுகளையும் நுணுக்கமாக அறிந்தவர். இசைஞானத்தில் நுண்மா நுழைபுலத்தர். கர்நாடக இசையை நன்கு தேர்ந்தவர். சென்னையில் வாழ்ந்த காலங்களில் இசைக் கச்சேரிகளுக்குத் தனது உடல் நலக் குறைவையும் பாராது மாலை வேளைகளில் சென்று வருபவர்.

செதுக்கிச் செதுக்கிக் கூர்மையான யாழ்ப்பாணச் சைவத் தமிழ்ப் பண்பாட்டின் உச்ச நிலை அவரது இயல்பு. வலிந்து பேசார். இனிய சொற்களின் உறவாளர். எளிதில்

எவருடனும் இணையார். இணைந்தால் பிரியார். பற்றுகள் குறைந்தவர். ஆகக் குறைந்த ஆசைகள் அவருக்கு. தவத்திரு சந்நிதானத்தின் முழுமையான ஆசீர்வாதத்தையும் வாழ்த்துக்களையும் பெற்ற திருமகனார். அவரோடு இணைந்து மெய்ப்புப் பார்த்தவர்கள் ஏழாலை பண்டிதர் மு. கந்தையா அவர்களும் தருமபுரம் ஆதீனப் புலவர் வித்வான் க. ஆறுமுகம் அவர்களும்.

அன்னாரின் பிரிவு தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு மாபெரும் இழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறையை பிரார்த்திக்கிறோம்.

## உலகின் மிகப்பெரிய பணக்காரர் பட்டியல்

Moet Hennessy Louis Vuitton (LVMH)-ன் தலைவரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான பெர்னார்ட் அர்னால்ட், எலன் மஸ்க்கை முந்தி உலகின் மிகப்பெரிய பணக்காரர் என்ற பெருமையை பெற்றுள்ளார். ஃபோர்ப்ஸின் கூற்றுப்படி, இந்த பிரெஞ்சு கோடீஸ்வரரின் குடும்பத்தின் நிகர மதிப்பு $207.6 பில்லியனாக வளர்ந்துள்ளதாக கூறியுள்ளது. இரண்டு கோடீஸ்வரர்களும் 2022ஆம் ஆண்டிலிருந்து கோடீஸ்வரர் பட்டியலில் யார் முன்னிலை என்ற போரில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் அர்னால்ட், அந்த ஆண்டின் பிற்பகுதியில் முதலிடத்தைப் பெற்றதாகக் கூறப்படுகிறது.

டெஸ்லாவின் $586.14 பில்லியனுடன் ஒப்பிடுகையில், டியோர், பல்கேரி மற்றும் செபோரா போன்ற ஆடம்பரப் பிராண்டுகளுக்குப் பின்னால் உள்ள நிறுவனமான டுஏஆர்-ன் சந்தை மதிப்பு $388.8 பில்லியனை எட்டியுள்ளது என்று அறிக்கை வெளிப்படுத்தியது.

ஃபோர்ப்ஸ் நிகழ்நேர பில்லியனர்கள் பட்டியலின் படி, உலகின் முதல் 10 பணக்காரர்கள்:

பெர்னார்ட் அர்னால்ட் ரூ குடும்பம் ($207.6 பில்லியன்)
எலன் மஸ்க் ($204.7 பில்லியன்)
ஜெஃப் பெசோஸ் ($181.3 பில்லியன்)
லாரி எலிசன் ($142.2 பில்லியன்)
மார்க் ஜுக்கர்பெர்க் ($139.1 பில்லியன்)
வாரன் பஃபெட் ($127.2 பில்லியன்)
லாரி பேஜ் ($127.1 பில்லியன்)
பில் கேட்ஸ் ($122.9 பில்லியன்)
செர்ஜி பிரின் ($121.7 பில்லியன்)
ஸ்டீவ் பால்மர் ($118.8 பில்லியன்).





எஸ்.எஸ்.நுஜன்

# ஐபில் ரன் மழையின் இரகசியம் என்ன..?

நடைபெற்று வருகின்ற ஐபிஎல் கிரிக்கெட் தொடரில் அதிகளவான ஓட்டங்கள் குவிக்கப்படுகிறது. ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் தொடரில் 250 ஓட்டங்கள் இலக்கு என்ற காலம் போய் இப்போது 20 பந்து பரிமாற்றத்தில் 250 ஓட்டங்கள் பெறப்படும் தொடராக மாறிப் போய் உள்ளது. இதற்கான காரணங்களாக ஐபிஎல் இல் உள்ள இம்பக்ற் பிளேயர் விதி, சிறிய அளவிலான மைதானங்கள், மற்றும் தட்டையான ஆடுதளங்கள் என்பன கூறப்படுகிறது.

இம்பக்ற் பிளேயர் விதியானது 11 பேர் விளையாடும் கிரிக்கெட் என்பதை 12 பேர் ஆடும் ஆட்டமாக மாற்றியுள்ளது. இதனால் சகலதுறை வீரர்களின் முக்கியத்துவம் குறைகிறது என்று இந்திய அணித்தலைவர் ரோகித் சர்மா, அவுஸ்திரேலியா ஜாம்பவான் ரிக்கி பாண்டிங் முதலானோரும் கருதுகின்றனர். இம்பக்ற் பிளேயர் விதி, ஏழு துடுப்பாட்ட வீரர்கள் மற்றும் ஐந்து பந்து வீச்சாளர்கள் என்று அணியை தெரிவு வழிவகுக்கிறது. இது அத்துடன் நின்றுவிடாமல் துடுப்பாட்ட வீரர்கள் ஆரம்பத்தில் இருந்தே அடித்து ஆடவும் சந்தர்ப்பத்தை வழங்குகிறது. எனவே இது ஒரு காரணமாக இருக்கலாம்.

இன்று மட்டுமல்ல இந்திய மைதானங்கள் எப்போதும்

அளவில் சிறியவை என்பதால் இதை ஒரு காரணமாக எடுத்தல் முறையன்று. மும்பை வான்கடே மற்றும் பெங்களூர் சின்னச்சாமி ஆடுதளங்கள் எப்போதும் தட்டையான துடுப்பாட்டத்திற்கு சாதகமான அதிக அளவில் ஓட்டங்கள் பெறப்படும் ஆடுதளங்களே. ஆனால் சென்னை லக்னோ அகமதாபாத் ஆகிய ஆடுதளங்களும் தட்டையானமை நிச்சயமாக தாக்கத்தை ஏற்படுத்தும். அத்துடன் இம்முறை கௌதம் கம்பீர் கொல்கத்தா அணியில் இணைந்த போது சுழற்பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுதளம் ஈடன் கார்டன் இல் எதிர்ப்பார்க்கப்பட்ட நிலையில் அங்கும் தட்டையான ஆடுதளமே.

ஆனால் இவற்றை விட சில காரணங்களும் இருக்கின்றன. குறிப்பாக ரேவிஸ் ஹெட், பிலிப் சோல்ட், வில் ஜாக்ஸ், ஹென்றி கிளாசேன், சுனில் நைரன், புதிய வரவான ஜாக் பிரேசர் மெக்கர்க் ஆகியோர் 100 பந்திற்கு 200 ஓட்டங்கள் எடுக்கும் வல்லமை கொண்டவர்கள் இவர்கள் பிற லீக் போட்டிகளிலும் சர்வதேச கிரிக்கெட் தொடர்களிலும் ஆரம்பம் முதலே அதிரடியாக ஆடுபவர்களே. நேரடியாக பந்து வீச்சாளர்களை அழுத்தத்திற்கு உள்ளாகி அதன் பின்னர் அதை பயன்படுத்தி ஓட்டங்கள் குவிப்பது இவர்களின் நோக்கமே.

266, 277, 287 என்ற இமாலய ஓட்டங்களை குவித்து 300 என்ற இலக்கை குறிவைக்கும் அணியான சன் ரைஸ்சர் அணியில் ஹெட் மற்றும் கிளாசேன் உள்ளனர்



















அவர்களுடன் அபிஷேக் சர்மா போன்ற இந்த வீரர்களின் துணையும் இருக்கிறது. 261 மற்றும் 272 ஓட்டங்களினை குவித்தது கொல்கத்தா நைட் ரைடர்ஸ் இந்த அணியில் சோல்ட் மற்றும் நைரன் உள்ளனர். எனவே இவ்வாறான வீரர்கள், தட்டையான ஆடுதளங்கள் மற்றும் இம்பக்ற் பிளேயர் விதி என்பன 250 என்ற இமாலய ஓட்டங்களை பெற உதவுவதுடன் தட்டையான ஆடுதளங்கள் மற்றும் இம்பக்ற் பிளேயர் விதி என்பன தொடர்ச்சியான 200 மற்றும் 200 இனை அண்மித்த ஓட்டங்களுக்கும் உதவுகின்றன.

இவற்றை விட இன்னொரு காரணமாக பந்து வீச்சாளர்கள் ஒழுங்காக பந்து வீசவில்லை என்று லக்னோ அணியின் பயிற்சியாளராக உள்ள முன்னாள் தென்னாப்பிரிக்கா அதிரடி வீரர் லான்ஸ் க்ளூஸ்னர் குற்றம் சாட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.